ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ பயிலும் சுடரொளி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பயிலும் சுடரொளி ॥

## அடியார்களின் அடியார்க்குத் தாம் அடியவர் எனல்

‡பயிலும் சுடரொளி மூர்த்தியைப்⋆ பங்கயக் கண்ணனை⋆
பயில இனிய⋆ நம் பாற்கடல் சேர்ந்த பரமனை⋆
பயிலும் திரு உடையார்⋆ யவரேலும் அவர் கண்டீர்⋆
பயிலும் பிறப்பிடை தோறு⋆ எம்மை ஆளும் பரமரே (1)

ஆளும் பரமனைக் கண்ணனை⋆ ஆழிப் பிரான் தன்னை⋆
தோளும் ஓர் நான்குடைத்⋆ தூமணி வண்ணன் எம்மான் தன்னை⋆
தாளும் தடக் கையும் கூப்பிப்⋆ பணியும் அவர் கண்டீர்⋆
நாளும் பிறப்பிடை தோறு⋆ எம்மை ஆளுடை நாதரே (2)

நாதனை ஞாலமும் வானமும் ஏத்தும்⋆ நறுந் துழாய்ப்
போதனை⋆ பொன் நெடுஞ்சக்கரத்து⋆ எந்தை பிரான் தன்னை⋆
பாதம் பணிய வல்லாரைப்⋆ பணியும் அவர் கண்டீர்⋆
ஓதும் பிறப்பிடை தோறு⋆ எம்மை ஆளுடையார்களே (3)

உடை ஆர்ந்த ஆடையன்⋆ கண்டிகையன் உடை நாணினன்⋆
புடையார் பொன் நூலினன்⋆ பொன் முடியன் மற்றும் பல்கலன்⋆
நடையா உடைத் திருநாரணன்⋆ தொண்டர் தொண்டர் கண்டீர்⋆
இடையார் பிறப்பிடை தோறு⋆ எமக்கெம் பெரு மக்களே (4)

பெருமக்கள் உள்ளவர் தம்⋆ பெருமானை⋆ அமரர்கட்
கருமை ஒழிய⋆ அன்றார் அமுதூட்டிய அப்பனை⋆
பெருமை பிதற்ற வல்லாரைப்⋆ பிதற்றும் அவர் கண்டீர்⋆
வருமையும் இம்மையும்⋆ நம்மை அளிக்கும் பிராக்களே (5)

அளிக்கும் பரமனை கண்ணனை⋆ ஆழிப் பிரான் தன்னை⋆
துளிக்கும் நறுங்கண்ணித்⋆ தூ மணி வண்ணன் எம்மான் தன்னை⋆
ஒளிக் கொண்ட சோதியை⋆ உள்ளத்துக் கொள்ளும் அவர் கண்டீர்⋆
சலிப்பின்றி ஆண்டெம்மைச்⋆ சன்ம சன்மாந்தரம் காப்பரே (6)

www.prapatti.com

சன்ம சன்மாந்தரம் காத்து⋆ அடியார்களைக் கொண்டு போய்⋆
தன்மை பெறுத்தித்⋆ தன் தாளிணைக் கீழ் கொள்ளும் அப்பனை⋆
தொன்மை பிதற்ற வல்லாறைப்⋆ பிதற்றும் அவர் கண்டீர்⋆
நம்மை பெறுத்தெம்மை⋆ நாள் உய்யக்கொள்கின்ற நம்பரே (7)

நம்பனை ஞாலம் படைத்தவனைத்⋆ திரு மார்பனை⋆
உம்பர் உலகினில் யார்க்கும்⋆ உணர்வரியான் தன்னைக்⋆
கும்பி நரகர்கள் ஏத்துவரேலும்⋆ அவர் கண்டீர்⋆
எம் பல் பிறப்பிடை தோறு⋆ எம் தொழுகுலம் தாங்களே (8)

குலம் தாங்கு சாதிகள்⋆ நாலிலும் கீழ் இழிந்து⋆ எத்தனை
நலம் தான் இலாத⋆ சண்டாள சண்டாளர்கள் ஆகிலும்⋆
வலம் தாங்கு சக்கரத்தண்ணல்⋆ மணிவண்ணற்காள் என்றுள்
கலந்தார்⋆ அடியார் தம் அடியார்⋆ எம் அடிகளே (9)

அடி ஆர்ந்த வையம் உண்டு⋆ ஆலிலை அன்ன வசம் செய்யும்⋆
படி ஆதுமில் குழவிப்படி⋆ எந்தை பிரான் தனக்கு⋆
அடியார் அடியார் தம் அடியார் அடியார்⋆ தமக்கு
அடியார் அடியார் தம்⋆ அடியார் அடியோங்களே (10)

‡அடியோங்கு நூற்றுவர் வீய⋆ அன்றைவர்க்கருள் செய்த
நெடியோனை⋆ தென் குருகூர்ச் சடகோபன்⋆ குற்றேவல்கள்⋆
அடியார்ந்த ஆயிரத்துள்⋆ இவை பத்தவன் தொண்டர் மேல்
முடிவு⋆ ஆரக்கற்கிற்கில்⋆ சன்மம் செய்யாமை முடியுமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com